# பெண்ணடிமை வேரறுப்போம்



தமிழினப் பெண்கள் விடுதலை இயக்கம்

தலைமை நாகர் கோவில்

# பெண்ணடிமை வேரறுப்போம்

19 4 92

தலைமை நாகர் கோவில்

## தொடர்பு முகவரி

**ஓவியா**

பொதுச் செயலாளர்
102 பி 1 அருண் நிவாசு
நாகர்கோவில்.

**தமிழ்ச் செல்வி**

பொருளாளர்
54, கண்ணகி நகர்
திருப்பூர்

**மஞ்சுளா**

நாட்டுமுத்து நாயக்கன் தெரு
தேனாம்பேட்டை
சென்னை.

**விலை : ரூ. 3.00**

# தமிழினப் பெண்கள் விடுதலை இயக்கம், ஏன்?

ஓர் இயக்கம் துவக்கப்படுகின்ற போது, அது உருவாவதற்கான காரண காரியங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது முதற்கடனாகும். அதன்பின் அக்காரண காரியங் களின் அடிப்படையில் இந்த இயக்கம் எந்தத் திசை வழியைத் தேர்ந்தெடுத்து செயல்படப் போகிறது, எந்தெந்த வழிமுறைகளில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு இச்சமூகத்தை வழி நடத்திச் செல்லப் போகிறது என்பதையும் நாம் தெளிவு படுத்தி யாக வேண்டும். இறுதியாக, இந்த இயக்கம் காண விரும்பும் ஓர் இலட்சிய சமூகத்தைப்பற்றியும் அதில் நம் வாழ்வின் தன்மை கள் எப்படியிருக்கும் என்பது குறித்தும் சில கருத்தியல் ரீதியான கனவுகளை நாம் விளக்கியாக வேண்டும். இவை அனைத்தும் அடங்கிய ஒரு பின்னணியில் தான் ஓர் இலட்சியப் பயணத்துக்கான அறை கூவலை நாம் விடுக்க இயலும்.

நமது அமைப்பான 'தமிழனப் பெண்கள் விடுதலை இயக்கம்' இன்றைய தமிழகச் சூழல்களைக் கணக்கில் கொண்டு, 'தமிழச்சியின் விடுதலையின்றி தமிழ்ச் சமுதாய மேம்பாடு இல்லை' என்ற பேருண்மையினை உணர்த்தும் விதமாய் தனது பயணத்தைத் துவங்கியுள்ளது.

உலகின் எந்த ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியினை நாம் சீர் தூக்கிப் பார்த்தாலும் அச்சமுதாயத்தின் முன்னேறிய தன்மையின் அடையாளமாக இருப்பது பெண்களின் நிலையேயாகும். இந்த உண்மை இப்போது மிகச் சாதாரணமாக அறிஞர்கள் மத்தியில் ஒத்துக் கொள்ளப்படும் ஒன்றாகும். மண்டல் குழு கூட 'யார் பிற்படுத்தப்பட்டவர்கள்' என்பதைத் தீர்மானிப்பதில் 'பெண்கள்' எந்தச் சாதியில் மிகவும் பின் தங்கியவர்களாக இருக்கிறார்கள் என்ற புள்ளி விபரத்தை அந்தச் சாதிக் குழுக்களை பிற்படுத்தப் பட்டவர்கள் பட்டியலில் இணைக்க ஒரு காரணியாகப் பயன்படுத்தியுள்ளது, கவனிக்கத்தக்கது.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் நமது தமிழ்ச் சமூகத்தில் நமது இயக்கம் தோன்றுவதற்கான காரணங்களை இரண்டு அம்சங்களாகக் காணலாம்.

நமது சமூகத்தில் சரிபகுதி மக்கட்தொகையாகப் பெண்கள் இருக்கிறார்கள். ஆனால், இந்த மொத்த சமூகத்தின் துன்பங்களின் சுமைதாங்கிகளாகவும், கூலியின்றியும் தனது உழைப்புக்கென எந்தவித மரியாதையின்றியும் அதிக நேரம் உழைக்கும் அடிமைச் சேவகர்களாகவும், வாழ்ந்து வருபவர்கள் பெண்களே.

தங்களுக்கென தனி உணர்வுகளுக்கான அங்கீகாரம் இன்றி ஆண்களின் பாலியல் உணர்வுகளுக்கு மாத்திரம் அல்ல ஆண்களின் பாலியல் வக்கிரங்களுக்கும் வடிகால் வசதிக்கான பொருட்களாக ஆக்கப்பட்டிருப்பவர்கள் பெண்கள்.

இங்கு பெண்ணுக்குத் தனி மனித அங்கீகாரமோ, அவள் வாழ்கையை அவள் விரும்பிய வழிகளில் வகுத்து கொள்ளும் உரிமைகளோ இல்லை. சிறு வயதில் தந்தைக்கும், இளமையில் கணவனுக்கும், முதுமையில் மகனுக்கும் கட்டுப்பட்டு அவர்களின் நிழலாக வாழ மட்டுமே அனுமதிக்கப்பட்டவள் பெண்!

'தாய்மை தெய்வீகமானது' என்று பசப்புகின்ற மொழிகளின் திரைகளுக்குப் பின்னால் தனக்கென வாழாமல் பிள்ளைகளுக்காகவே உழைத்து நாட்களைக் கடத்திய பின் இறுதிக் காலத்தில் அம்மக்கட்கே (மகன்களுக்கே) அடிமைகளாய் நைந்து கொண்டிருப்பவர்கள் பெண்கள் எனவே, இச்சமூகத்தில் முதற்கட்டமாக 'தாங்கள் வாழ்வதற்காகத் தங்கள் விடுதலையைத் தேடியாக வேண்டிய நிலையிலேதான் பெண்கள் இருக்கிறார்கள்.

இவர்களுக்கு ஓர் அமைப்பு கண்டிப்பாக தேவை. அந்த அமைப்பாக 'தமிழனப் பெண்கள் விடுதலை இயக்கம்' தன்னை வளர்த்துக் கொள்ளும்.

இரண்டாவதாக, நாம் முதலிலேயே குறிப்பிட்டபடி பெண்களின் நிலையே சமூகத்தின், வளர்ச்சியைத் தீர்மானிக்கும் அளவுகோலாகத் திகழ்கிறது. 'பெண்ணடிமை தீராமல் மண்ணடிமை தீராது' என்பது புரட்சிக் கவிஞரின் பொன் மொழியாகும். எனவே, மீதி அய்ம்பது சதவீதமாக இருக்கும் ஆண்களின் விடுதலைக்கும் பெண் விடுதலையே முன் நிபந்தனையாகிறது. ஆணின் அடிமைத்தனத்தை நிலை நிறுத்திக்கொண்டிருக்கும் அமைப்புக்களான சாதிய அமைப்பு, வர்க்க சமுதாய அமைப்பு, அதிகாரக்கட்டமைப்பு ஆகியவற்றைத் தாங்கி நிற்கும் அடிப்படை அமைப்பாகப் பெண்ணடிமையே நிற்கிறது.

எனவே, இரண்டாவது கட்டமாக தன்னை அடிமைப்படுத்தி கொண்டிருக்கும் ஆண்களின் இன, சமுதாய அரசியல், கலாச் சார விடுதலைக்காகவும் 'பெண்கள்' விடுதலையடைய வேண்டி யிருக்கிறது.

இவ்வாறாக, சரிபகுதி மக்கட் தொகையான பெண்களின் குறிப் பான தேவைகளின் அடிப்படையிலும், ஒட்டு மொத்த சமுதாய விடுதலை என்ற பொதுவான தேவைகளின் அடிப்படையிலும் 'பெண் விடுதலை இயக்கம்' இங்கு அவசியமாகத் தேவைப் படுகிறது.

காலத்தின் இத்தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாய் நமது இயக்கம் துவங்கப்படுகிறது.

**பிற இயக்கங்கள்:-**

இதனைச் செய்ய புதிதாக ஓர் இயக்கம் தேவைதானா? இருக்கும் மற்ற இயக்கங்களில் இணைந்து செய்ய முடியாதா?

இது மிக மிக நியாமான கேள்விதான். பிற இயக்கங்கள் என்கின்ற போது, முதலில் பொதுவான இயக்கங்களை எடுத்துக் கொள்வோம். நமது வரலாற்றில் இவை பெண்களின் குறிப்பான பிரச்சினைகளைக் கவனிக்கத் தவறிய ஆண்களின் இயக்கங் களாகவே இருந்து வருவது அனுபவ உண்மையாகும்.

பெண்களின் தனித்த முயற்சிகள் சிறு சிறு குழுக்களாக நல்ல அடிப்படையுடன் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்பது உண்மையாயினும் இவை பரவலாக இயக்கமாக்கப்படவில்லை யென்பதும், நமது தமிழக மக்களின் குறிப்பான அரசியல் சமூகச் சூழ்நிலைகளுடன் இவை ஒன்றவில்லை என்பதும் இக்குறை பாடுகளைக் களையக்கூடிய ஒரு புதிய இயக்கத்தின் தேவையை வலியுறுத்தி நிற்கின்றன.

இவை தவிர அரசியல் கட்சிகளின் பிரிவுகளாக இயங்கும் பெண்கள் அமைப்புக்கள் அந்தந்த அரசியல் கட்சிகளின் ஆதா யங்களுக்காக தங்கள் சிந்தனை எல்லைகளையே குறுக்கிக் கொள்கின்றன.

மேற்கண்ட இந்த அமைப்புக்களின் சாதக, பாதக உண்மைகளை ஆய்ந்து அவற்றின் அடிப்படையில் இன்றைய தமிழக பெண்களின் வரலாற்றுத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய புதிய இயக்கமாகத் 'தமிழினப் பெண்கள் விடுதலை இயக்கம்' பரிணமிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

**அடிமை நிலைக்கான காரணங்கள்:-**

பெண்களின் மோசமான பாதுகாப்பற்ற வாழ்க்கை நிலைகளும் இரண்டாந்தரக்குடிகளாக அவர்கள் நடத்தப்படும் இழிநிலையும், நீங்க வேண்டும் என்பதற்காகவும் ஆரோக்கியமான சுதந்திரமான பெண்களும் ஆண்களும் இணைந்து தங்களுக்கான ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்பதற்காகவும் துவங்கப் படுகின்ற நமது இயக்கம் முதலில் இந்த அடிமை நிலைக்கான காரணிகளை வரிசைப்படுத்த வேண்டியது அவசியமாகும். அக்காரணிகள் என நாம் எடுத்து வைப்பன:

1. மதம் குறிப்பாக இந்து மதம் - இந்து மத இலக்கியங்கள்
2. பார்ப்பனீயக் கலாச்சாரம்
3. இந்து மதச் சாதிய குடும்ப அமைப்பு
4. உலகின் அனைத்து வளர்ச்சிகளையும் மீண்டும் மீண்டும் இந்த இந்துமத சமூக அமைப்பைக் காப்பாற்றவே பலியிட்டுக் கொண்டிருக்கும் அதிகாரப் கட்டமைப்பு.
5. ஆண்களின் தலைமையிலான உற்பத்தி முறைகள்
6. இவற்றைக் கட்டிக்காக்கும் விதமாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் தொடர்பு சாதனங்கள்.
    1) பத்திரிகைகள்
    2) தொலைக்காட்சி
    3) வானொலி
    4) திரைப்படங்கள்

மேலே வரிசைப்படுத்திய இச்சக்திகள் நமக்கு எதிராக பிரம்மாண் டமாக நம்முன் நின்று கொண்டிருக்கின்றன. இவற்றில் அழிக்க வேண்டியவற்றை அழித்தொழிப்பது என்ற போக்கிலும் நாம் நம் வசப்படுத்த வேண்டியவற்றை எதிர்த்த இயக்கத்தின் மூலமாகவும், ஆக்க வேலைகள் மூலமாகவும் நம் வயப்படுத்துவது என்ற போக்குகளிலும் நமது இயக்கம் செயல்படும்.

**செயல்படு முறைகள்:-**

இவ்வமைப்பு ஜனநாயக ரீதியிலான போர்க்குணமிக்க, செயல் துடிப்புள்ள இயக்கமாக உருக்கொள்ளும்.

1. கடுமையான, இடைவிடாத பிரச்சாரம்
2. புதிய சிந்தனைகளை, இன்றைய சமூகத்தின் தேவைக ளுக்கான தாகங்களைச் சுமந்து செல்லும் கலை இலக்கிய நிகழ்ச்சிகள்
3. ஜனநாயக ரீதியிலான மக்கள் போராட்டங்கள்

4. கொள்கை வகுப்புகள்
5. புதிய நூல் வெளியீடுகள்

ஆகியவை இவ்வமைப்பின் ஆக்க பூர்வமான செயல்பாடுகளாக அமையும்.

**அமைப்பு முறைகள்:-**

அமைப்பு, தோழமையான பெண்களின் கூட்டுத்தலைமையில் இயங்கும். வடிவத்தைப் பொறுத்த வரை தற்போதைய சமூக அமைப்பின் பிற இயக்கங்களின் வடிவ அமைப்பு பின்பற்றப்பட்டாலும், பொறுப்புக்கள் சுழற்சி முறையில் வழங்கப்படும். மூன்றாண்டுகளுக்கொரு முறை பொறுப்பாளர்கள் மாற்றப்படுவார்கள்.

சுதந்திர சிந்தனையுள்ள, இலட்சிய நோக்குடைய பெண்களை தனது அமைப்பின் தூண்களாக வளர்ந்தெடுத்து, அவர்களின் மூலமாக பெண்ணுக்கும் ஆணுக்குமே சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் வழங்கக்கூடிய சமூகத்தை உருவாக்கும் உயரிய கனவைத் தொலைநோக்காகக் கொண்டு இவ்வமைப்பு பாடுபடும்.

**முதற்கட்ட கோரிக்கைகளும், விளக்கங்களும்**

இந்த நீண்ட பயணத்தின் முதற்கட்ட கோரிக்கைகளாகக் கீழ்க் கண்டவற்றை வைக்கிறோம். இவை இந்தக் காலகட்டத்தின் முதற்கட்ட கோரிக்கைகள் மாத்திரமே என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறோம்.

1. பெண் குழந்தைகள் கருவிலேயே அழிக்கப்படுவது குறித்த சமூக ஆய்வுகள் முறையாக நடத்தப்பட்டு அக்கொடிய முறை தடுக்கப்பட வேண்டும்.
2. **திருமணம்:**
   தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல், 'திருமணம்' என்பதே 'பெண்ணுக்கான அடிமைப் பிரவேசம்' என்பதாக இருக்கின்ற நிலை மாறி பெண்ணுக்கும், ஆணுக்குமான ஒப்பந்த முறையாய் புதிய வாழ்க்கை நெறி மலர வேண்டும். இந்த இலட்சியத்தை அடையும் பொருட்டு,
   அ) கட்டாயத் திருமணங்கள் அனைத்து மட்டத்திலும் ஒழிக்கப்பட வேண்டும்;
   ஆ) திருமண வயதுக்கு முன் நடக்கும் திருமணங்களும், குழந்தைத் திருமணங்களும் தடுக்கப்பட வேண்டும்;

இ) சுய தொழில் / வருமான வாய்ப்பு இன்றி பெண்களுக்குத் திருமணம் முடிப்பது தடுக்கப்பட வேண்டும்;

ஈ) 'திருமணம்' என்ற பெயரில் நடக்கும் முறைகேடுகள் களையப்பட, திருமணங்களுக்குக் கட்டாயப் பதிவு முறை (Registered marriage) கொண்டு வரப்பட வேண்டும்.

உ) திருமணச் செலவுகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் வரி விலக்குகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

3) **வரதட்சிணை:**

பெண்ணை இழிவு படுத்துவதும், பல பெண்களின் மரணத்துக்குக் காரணமாயிருப்பதுமான வரதட்சிணை முறை ஒழிக்கப்பட்டு, பெண்ணுக்கான 'சொத்துரிமை' நடைமுறைக்கு வர வேண்டும். தன்மானமிக்க பெண் இளைஞர்களினாலேயே இது சாத்தியமாகும்.

4) **கல்வி:**

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற குரல் நகரங்களில் அமுங்கி விட்டாலும் கூட, இன்னும் கிராமங் களில் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறது. இந்நிலை மாற,

அ) 10-ம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி முறை கொண்டு வரப்பட வேண்டும்.

சிறு வயதிலேயே பெண், ஆண் என்ற பேதங்கள் அவர்கள் மனதைத் தாக்கிக் கெடுக்காதிருக்கும் பொருட்டு,

ஆ) சிறு வயது முதலே பெண், ஆண் இணைந்து பயிலும் பள்ளிகள் பெருகவேண்டும். ஒரு பாலர் பள்ளிகள் தடை செய்யப்படுவது கூட வரவேற்கத் தக்கதே!

இ) பள்ளிகளில் உடற்பயிற்சிப் பாடம் கட்டாயமாக்கப் பட்டு, அதன் மதிப்பெண்கள் தேர்ச்சி பெறுவதற்குக் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

மேலும்,

ஈ) இயந்திரவியல் (Mechanical) மற்றும் பிற தொழில் கல்விகளில் பெண்களுக்கென தனி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும்.

5) **வேலை வாய்ப்பு:**

பெண்களுக்கான அனைத்து அடிமை நிலைகளுக்கும் மிகப் பெரும் காரணிகளில் ஒன்றாகத் திகழ்வது

அவர்கள் ஆண்களைச் சார்ந்து வாழும் அவர்களின் சார்பு நிலையேயாகும். இந்நிலை மாற பெண்களுக் கான வேலை வாய்ப்பு பெருக, பல்வேறு நிலைகளில் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அதன் பொருட்டு,

அ) பெண்களுக்கு 50% ஒதுக்கீடு மத்திய, மாநில அரசு வேலை வாய்ப்புகளில் (சாதீய ஒதுக்கீட்டுக்குள்) வழங்கப் பட்டு நடைமுறைப் படுத்தப் படவேண்டும்.

ஆ) கிராமங்களில் பெண்ணுக்கும், ஆணுக்கும் சம வேலை வாய்ப்பு, சம கூலி என்பது நடைமுறையில் கொண்டு வரப்பட வேண்டும்.

இ) பெண்கள் இதுவரை நுழையாத /வெற்றிகரமாக ஈடு படாத துறைகளில் பெண்களை ஈடுபடுத்த அரசு தனிக் கவனம் எடுத்து, பெண்களுக்கான தனித் தொழிற்பயிற்சி மய்யங்கள் அமைத்து அவர்களுக்கு வேலையும் தர வேண்டும்.

(உதாரணமாக, பேருந்து ஓட்டுனராகப் பெண்களை அமர்த்த இந்த அரசு மறுக்கிறது, நடத்துனர்களாக அமர்த்தி அந்தத் திட்டமும் வெற்றி பெறவில்லை. இதற் குக் காரணம், 'அரசு' அதற்கான சூழல்களைத் திட்ட மிட்டு உருவாக்காததுதான். (infrastructure). மகளிர் பேருந்து வண்டிகள் சென்னையைத் தவிர பிற இடங் களில் இல்லை. பிற இடங்களிலும் இம்முறையை அறி முகப்படுத்தி அதில் பெண் பேருந்து ஓட்டுனர்கள், நடத் துனர்களை நியமிக்கலாம், முதற்கட்டமாக சிறிது காலம் கழித்துப் பொது பேருந்துகளிலும் அவர்களை அறிமுகப் படுத்தலாம். அதிலும் கூட முதற்கட்டமாக அதிக கூட்ட மேறும் பிக் அவர்ஸ் (peak hours) எனச் சொல்லப்படும் நெரிசலான நேரங்கள் தவிர்த்து பிற நேரங்களில் அவர் களை முதலில் அறிமுகப் படுத்தலாம். பெண் பேருந்து ஓட்டுனர், நடத்துனரிடம் தகாத முறையில் நடந்து கொள் ளும் பயணிகள் கடுமையான முறையில் தண்டிக்கப்பட சட்டங்கள் இயற்றி, அதன் மூலம் அது போன்ற போக்குகளை மக்கள் மத்தியில் மாற்ற முயற்சிக்கலாம்.

இவற்றையெல்லாம் நாம் விரிவாகச் சொல்லுவதன் காரணம் இன்றைய தினம் பெண்களைத் திட்டமிட்டு அனைத்துத் துறைகளிலும் கொண்டு வர வேண்டிய தேவை இருக்கிறது என்பதுதான்.)

மேலும், பல பெண்கள் தங்கள் திருமணத்துக்குப் பின்னரே தங்கள் அடிமை நிலையை உணருகிறார்கள். அவ்வமயம் அவர்கள் வேலையில் சேருவதற்கான வயது கடந்து விடுகிறது. அது மாத்திரமின்றி 'திருமணம்' ஒன்றையே நம்பி உரிய நேரத்தில் வேலைக்குப் போகாமல் இருந்து விட்டுப் பின்னர் கணவனால் கைவிடப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு அதற்குப் பின் அல்லது கணவனது (அரசு ஊழியரல்லாத) மரணத்துக்குப் பின் வேலைக்கு வர விரும்பினாலும் அவர்கள் வயது கடந்து விடுகிறது. இச் சூழல்களை உத்தேசித்து,

ஈ) பெண்களுக்கு வேலையில் சேருவதற்கான உச்சபட்ச வயது 40 ஆக உயர்த்தப்பட வேண்டும்.

உ) அனைத்துப் பெண்களும் தங்களுக்கெனத் தனியான வருமானம் பெறக் கூடிய (சுய காலில் நிற்கக் கூடிய) சக்தி பெற்றவர்களாக உருவாக்கப்பட வேண்டும். அனைத் துப் பெண்களுக்கும் வேலை வாய்ப்பு அல்லது சுய தொழில் வாய்ப்பு தருவதற்கு அரசு முன்வர வேண்டும்.

ஊ) நவீன தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படும் போது பெண்களுக்கு அத்தொழில்களில் முறையான பயிற்சி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் வேலை பறிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

**6) சட்டம்:**

நமது சமூகத்தின் எழுதப்படாத சட்டங்களை (மரபுகள்) விட நமது மதக் கோட்பாடுகளை விட, நமது சட்டங்கள் (இன்றைய சட்டங்கள்) ஒப்பீட்டளிவிலும், எழுத்தளவிலும் பெண்களுக்கு சம உரிமையை அங்கீகரிக்கின்றன என்றா லும், அவை ஆணாதிக்க சமூகத் தின் வரம்பு களுக்கு உட்பட்டவையாகவே அமைந்துள்ளன. இவற்றைப் பற்றிய பருண்மையான ஆய்வுகள் பெண்ணியப் பார்வை யில் செய்யப்பட வேண்டிய தேவை இருக்கிறது. இருப்பி னும், முதற்கட்டமாகக் கீழ்க் காணும் கோரிக்கைகளை நாம் வைக்கிறோம்:

அ) சட்டங்கள் மத அடிப்படையிலில்லாமல் பொதுவாக் கப்பட வேண்டும்.

பெண்ணுக்குச் சொத்துரிமை ஏட்டளவில் வந்து விட் டாலும் அது நடைமுறைப் படுத்தப் படும் பொருட்டு,

ஆ) பெண்களுக்கு சொத்து எழுதாத உயில் செல்லாது எனச் சட்டமியற்றப்பட வேண்டும்.

இன்றைய தினம் விபச்சாரத் தடைச்சட்டங்கள், குறிப் பாக SIT ACT போன்றவை பெண்களை மட்டுமே பாதிப்பதாக அமைந்து நடைமுறைப் படுத்தப் பட்டு வருகின்றன. மேலும், வசதி வாய்ப்பில்லாத ஏழைப் பெண்கள் சமூகத்தின் பல்வேறு தரப்பிலுள்ள மற்றவர் களாலும், காவல் துறையினராலும் கொச்சைப் படுத்தப் படவும், அவமானப் படுத்தப்படவும், பழி வாங்கப்படவும், இச்சட்டங்கள் பயன்பட்டு வருகின்றன. எனவே, இவற்றை முறையான ஆய்வுக்கு உட்படுத்தி, அதன்படி,

இ) விபச்சாரத் தடைச் சட்டங்களில் உரிய மாற்றங்கள் அமுல் படுத்தபப்பட வேண்டும் அல்லது தேவைப் பட்டால் அச்சட்டங்கள் நீக்கப்பட வேண்டும்.

ஈ) பெண்களைப் பாலியல் ரீதியாகக் கொச்சைப் படுத்தியு,ம் "தேவடியாள்" என்ற பொருள் படும்படி அவமானப்படுத்தியும் பேசுவது, எழுதுவது கடுமையாகத் தண்டிக்கப்பட, சட்டத்தில் வகை செய்யப்பட வேண்டும். (தீண்டாமை ஒழிப்புச் சட்டம் உள்ளது போல்).

உ) சாதிமறுப்பு/கலப்புத்திருமணம் செய்து கொள்பவர் களுக்கு அரசின் இட ஒதுக்கீட்டில் 10% வழங்கப்பட வேண்டும். இதில் ஷெட்யூல்டு இனத்தைச் சேர்ந்த ஆணையோ பெண்ணையோ திருமணம் செய்து கொள்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்க சட்டத்தில் வகை செய்யப்பட வேண்டும். இப்போது இருந்து வரும் இட ஒதுக்கீட்டில் எல்லாத் தொகுதியிலிருந்தும் சம அளவில் பிரிக்கப்பட்டு முதல் 5 ஆண்டுகளுக்கு 10% பின்னர் மேலும் சதவிகிதத்தை அதிகப்படுத்திக் கொண்டு போகும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும்.

**7) மற்றவை:**

அ) 25% க்கு மேல் பெண்கள் பணிபுரியும் அலுவ லகங்களில் பெண் பொறுப்பாளர்கள்/பிரதிநிதிகள் இல்லாத தொழிற்சங்கங்களுக்கு பதிவு இரத்து செய் யப்பட வேண்டும்.

ஆ) அரசு அமைக்கும் அனைத்து கமிட்டிகளிலும் (அனைத்துத் துறையிலும்) பெண் பிரதிநிதிகள் நியமிக்கப்பட வேண்டும்.

இ) பெண்களை போதைப் பொருட்களாகவும், குடும்ப அமைப்புக்குள் ஒடுக்கியும் சித்தரிக்கும் விளம்பரங்கள் தடை செய்யப்பட வேண்டும்.

ஈ) ஆபாசத் திரைப்படங்கள், சுவரொட்டிகள் மீதான தணிக்கை விதிகள் கடுமையாக்கப் பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

இத்தகைய கோரிக்கைகளை தன்னுடைய முதற்கட்ட உடனடிக் கோரிக்கைகளாகக் கொண்டு தோற்றம் கொள்கிறது தமிழினப் பெண்கள் விடுதலை இயக்கம்.

இப்படி ஒரு சமூக இயக்கத்தின் தேவையை உணர்ந்து இந்த இயக்கத்தின் காப்பாளராக இருந்து இந்த இயக்கத்தினைத் தட்டியெழுப்பி செயல்பட வைக்க வேண்டிய மாபெரும் சமூகத் தலைமையை டாக்டர் இராமதாசு அவர்கள் ஏற்றுக் கொண்டிருகிறார்கள்.

ஓர் அரசியல்வாதி என்ற நிலையைக் கடந்து, சமூகத்தின் அடிப்படைப் பிரச்சனைகளுக்குத் தன் பணியைத் தரும் முகமாய், அவர் நல்க முன் வந்திருக்கும் இந்த ஆதரவை தமிழகப் பெண்கள் முழுமையாகப் பயன்படுத்தி இவ்வியக்கத்தினை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

தமிழக மக்களே! தமிழ்ப் பெண்ணினமே எழுந்து வாருங்கள்! விழிப்படைந்து வாருங்கள்!

புதிய உலகம் படைப்போம்!

அதனைச் சமநீதியோடு படைப்போம்!

**- தமிழினப் பெண்கள்**

**விடுதலை இயக்கம்.**

கலைக்கதிர் அச்சகம், கோவை 37